57

# திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம்

உறுப்பினர் செயலர் (பொறுப்பு) அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர்: திருமதி.ஆ.மணிமேகலை, பி.இ.,

ந.க.எண். 77/2020 தி.உ.தி.கு. நாள்.08.07.2020.

பொருள்: திட்ட அனுமதி – கட்டிடம் - திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் - திருநெல்வேலி மாநகராட்சி - பாளையங்கோட்டை வார்டு - ஒப்புதலளிக்கப்பட்ட ஹைகிரவுண்ட் விரிவு அபிவிருத்தி திட்டம் வி.எம்.சத்திரம் கிராமம் - சர்வே எண்.258/9 மற்றும் 260/1, பழைய நகரளவை வார்டு-A, பிளாக் -2, நகரளவை எண்.91, புதிய நகரளவை வார்டு-BS, பிளாக்-12, நகரளவை எண்.91 அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு LPH/DTP No.56/62 -இல் மனை எண்.A58-இல் 1039.00 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் ஸ்டில்ட் + 5 தளங்களில் உத்தேச டிபார்ட்மெண்டல் ஸ்டோர் மற்றும் 23 குடியிருப்புகள் கொண்ட கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கோருவது கட்டிடம் கட்ட கட்டுமானத்திற்கு திட்ட அனுமதி வழங்க இசைவளிக்கப்பட்டது - திட்ட அனுமதி அளித்தல் - தொடர்பாக.

பார்வை:

1. மனுதாரர் Gem Properties உரிமையாளர் திரு.S.பீர் மைதீன் (Power Agent), திரு.G.ரெங்கநாதன் இட உரிமையாளர் என்பவர்களின் விண்ணப்பம் நாள்.20.01.2020 மற்றும் 07.07.2020.
2. அரசாணை (நிலை) எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள்.28.03.2012.
3. அரசாணை (நிலை) எண்.85 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.16.05.2017.
4. அரசாணை (நிலை) எண்.135 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.21.07.2017.
5. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7486/2009/பிஏ2, நாள்.16.04.2009.
6. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21075/2009/பிஏ1, நாள்.27.06.2012.
7. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12201/2017/சிபி, நாள்.22.09.2017.
8. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.14227/2017/பிஏ1, நாள்.14.12.2017.
9. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.8557/2019/GR, நாள்.08.05.2019.
10. அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019.
11. அரசாணை (நிலை) எண். 166., வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்.29.11.2018 (Insisting TNRERA Registration).
12. மாவட்ட அலுவலர் தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை திருநெல்வேலி அவர்கள் கடிதம் எண்.5649/இ/2019, நாள்.04.06.2019.
13. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண்.3597/2020/TCP-6 நாள்.30.05.2020
14. செயற்பொறியாளர்(தி) திருநெல்வேலி மாநகராட்சி அவர்களின் ந.க.எண்.529/2020/ஜிபி1 நாள்.09.03.2020.
15. திருநெல்வேலி உள்ளூர் திட்டக்குழும தீர்மானம் எண்.12 நாள்.20.02.2020.

---------

உத்தரவு:

திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம்,திருநெல்வேலி மாநகராட்சி ,பாளையங்கோட்டை வார்டு - ஒப்புதலளிக்கப்பட்ட ஹைகிரவுண்ட் விரிவு அபிவிருத்தி திட்டம் வி.எம்.சத்திரம் கிராமம் - சர்வே எண்.258/9 மற்றும் 260/1, பழைய நகரளவை வார்டு-A, பிளாக் -2, நகரளவை எண்.91, புதிய நகரளவை வார்டு-BS, பிளாக்-12, நகரளவை எண்.91 அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு LPH/DTP No.56/62 -இல் மனை எண்.A58-இல் 1039.00 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் உத்தேச டிபார்ட்மெண்டல் ஸ்டோர் மற்றும் 23 குடியிருப்புகள் கொண்ட கட்டுமானத்திற்கு பார்வை 13-இல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் நடவடிக்கைகள் கடிதத்தில், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 49-இன் கீழ் திட்ட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்பட்டுள்ளது.

நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் திட்ட அனுமதி வழங்க இசைவளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு **க.வ/ந.ஊ.இ.எண்.119/2020** என எண்ணிட்டு பெறப்பட்டுள்ளது.

## Area Statement:-

| வ. எண் | Floor details | FSI Area in Sq.m | Non FSI Area in Sq.m | Use |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | Stilt floor | .... | 441.40 | Parking |
| 3. | First Floor | 415.60 | - | Departmental store & 3 Dwelling units |
| 4. | Second Floor | 415.60 | - | 5 Dwelling units |
| | Third floor | 415.60 | - | 5 Dwelling units |
| | Fourth floor | 415.60 | - | 5 Dwelling units |
| | Fifth floor | 415.60 | - | 5 Dwelling units |
| | Terrace floor | .... | 26.57 | Head Room |
| | **Total** | **2078.00** | **467.97** | Departmental store & 23 Dwelling units |

FSI Area = 2078.00 Sq.m
FSI =2.0
OSR Area = Nil (Approved Layout)

உத்தேச டிபார்ட்மெண்டல் ஸ்டோர் மற்றும் 23 குடியிருப்புகள் கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் இசைவளிக்கப்பட்ட வரைபடங்களுக்கு தி.அ/க.வ/திஉதிகு **எண்.19அ,ஆ,இ/2020** என எண்ணிடப்பட்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

திட்ட அனுமதி நாள் - 08.07.2020
திட்ட அனுமதி முடியும் நாள் - 07.07.2025

உத்தேச உபயோகம் - டிபார்ட்மெண்டல் ஸ்டோர் மற்றும் 23 குடியிருப்புகள்

சிறப்பு நிபந்தனைகள்:

1. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
2. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the

condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

3. Applicant should obtain consent from Tamilnadu Pollution Control Board under section 25 of the Water Act 1974 for discharge of sewage.

4. "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

5. மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகளிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

6. The Provisions in the G.O.(Ms)No.17, Housing and urban Development (UD4(3) Department dated: 05.02.2016 relating to installation and use of solar energy system should be followed.

7. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated.22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016, The promoter has to advertise, Market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real the Real Estate Regulatory Authority".

8. பார்வை 9-இல் காணும் இவ்வலுவலக சுற்றறிக்கையின் படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு W.P(MD)No.8948 of 2019, WMP (MD)No.6912 and 6913 of 2019 நாள்.12.04.2019 நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள "This order is passed subject to the outcome of the writ petition WP(MD)No.8948 of 2019 என நிபந்தனையிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:</u>

1. திட்ட அனுமதி வழங்கப்பட்ட நாளிலிருந்து ஐந்து வருடங்கள் வரை நடைமுறையில் இருக்கும்.

   அனுமதி காலம் **08.07.2020** முதல் **07.07.2025** வரை.

2. டிபார்ட்மெண்டல் ஸ்டோர் மற்றும் 23 குடியிருப்புகள் கட்டுமானத்திற்கு Solar Water heating System அமைக்கப்படவேண்டும்.

3. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்தப் பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

4. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.

5. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்
6. மழை நீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002 - இன் படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்
7. உத்தேச கட்டிடத்திலிருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
8. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
9. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
10. அரசாணை எண்.341/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(ந.நி1) துறை நாள்.3.11.04–ன்படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்
11. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
13. உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுபாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water Act)இன் படி மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்படவேண்டும்.
14. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகல் மற்றும் இவ்வாணையின் நகல் ஒவ்வொரு வீட்டையும் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.
15. அரசாணை எண்.17 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.05.02.2016-ன் படி ஒரு கிலோ வாட் மின்சாரத்திற்கு குறைந்தபட்சம் 10 சமீ என்ற அளவில் மேல் தளப்பரப்பில் 1/3 பாகம் Solar Photo Voltaic panels அமைக்கப்படவேண்டும்.
16. கட்டிட அனுமதி தொடர்பாக திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளரிடம் தனியாக உரிமம் பெறப்பட வேண்டும்.
17. திட்ட அனுமதி கோரி சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்கள் ஏதேனும் தவறானது என தெரிய வந்தால் இந்த உத்தரவை ரத்து செய்து சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
18. கட்டிடம் கட்டப்படும்போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.
19. பிரஸ்தாப மனையிடம் குறித்து நீதிமன்ற வழக்குகள் ஏதும் நிலுவையில் உள்ளதா என்பதை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும்.

மனுதாரர் நன்னிலை வரியாக ரூ.2800/- (ரூபாய் இரண்டாயிரத்து எண்ணூறு மட்டும்) 07.07.2020 -ல் அரசு கணக்கில் செலுத்தியுள்ளார். திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு அபிவிருத்தி கட்டணமாக ரூ.32,500/-(ரூபாய் முப்பத்தி இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) நாள் 07.07.2020-இல் இந்தியன் வங்கி, N.G.O. காலனி கிளையில் செலுத்தியுள்ளார்.

பார்வை 2-ல் கண்டுள்ள அரசாணையின்படி உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணத்தொகை ரூ.7,79,300 (ரூபாய் ஏழு இலட்சத்து எழுபத்தி ஒன்பதாயிரத்து முன்னூறு மட்டும்) நாள் 07.07.2020 உரிய அரசு கணக்கில் செலுத்தியுள்ளார்.

பணிமுடிவு சான்றிதழ் தொடர்பாக கூராய்வு கட்டணம் ரூ.27,500/- (ரூபாய் இருபத்தி ஏழாயிரத்தி ஐந்நூறு மட்டும்) 07.07.2020-இல் இந்தியன் வங்கி, N.G.O. காலனி கிளையில் செலுத்தியுள்ளார்.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019-இன் பிரிவு 7-ன் படி கூராய்வு கட்டணம் ரூ.6600/- மற்றும் ரூ.100/-மொத்தம் ரூ.6700/-னை (ரூபாய் ஆறாயிரத்து எழுநூறு மட்டும்) 14.01.2020 மற்றும் 07.07.2020 ஆகிய தேதிகளில் இந்தியன் வங்கி, N.G.O. காலனி கிளையில் செலுத்தியுள்ளார்.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019-இன் பிரிவு 35(21)-ன் படி Security Deposit கட்டணம் ரூ.3,89,650/- (ரூபாய் மூன்று இலட்சத்து எண்பத்தி ஒன்பதாயிரத்து அறுநூற்றி ஐம்பது மட்டும்) 07.07.2020-ல் இந்தியன் வங்கி, N.G.O. காலனி கிளையில் செலுத்தியுள்ளார்.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019-இன் பிரிவு 35(22)-ன் படி Display Board Deposit கட்டணம் ரூ.1,500/- (ரூபாய் ஆயிரத்தி ஐநூறு மட்டும்) 07.07.2020-ல் இந்தியன் வங்கி, N.G.O. காலனி கிளையில் செலுத்தியுள்ளார்.

மனுதாரர் மேற்கொண்டு உத்தரவிற்காக திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளரை அணுகிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

மனுதாரருக்கு தொடர்ந்து உத்தரவினை வழங்கிட திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8/7/2020

உறுப்பினர் செயலர் (பொறுப்பு),
திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம்,
திருநெல்வேலி.

8/7/2020

இணைப்பு
முத்திரையிடப்பட்ட வரைபடம் 2 தொகுப்பு
பெறுநர்: ஆணையாளர், திருநெல்வேலி மாநகராட்சி,
நகல்:

1. வைப்பறை (உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் ஒரு தொகுப்பு)
2. திரு.G.Renganathan,
   Gem Properties (Power Agent)
   D-9B, Gem Rainbow, 27th Cross street,
   Maharaja Nagar;
   Palayamkottai-627011
   } உத்தரவு கடிதம் மட்டும்

# திருநெல்வேலி மாநகராட்சி

## கட்டிட அனுமதி உத்தரவு

வி எண்:146/CP/20-21/0011957
பி.எ எண்:146/BPA/2020/01718

உ.ஆணை 146/BL/2020/01445

நாள் 17/10/2020

பொருள். கட்டிட அனுமதி திருநெல்வேலி மாநகராட்சி, கிராமம், நகரளவு எண். 91, தொகுதி BS, பகுதி 12, கதவு/மனை எண்:ASS கட்டிட அனுமதி வழங்கி உத்தரவிடுதல்
பார்வை : ரெங்கநாதன், ஜெம் ப்ராப்பர்டிஸ் (பவர் ஏஜென்ட்) என்பவரது 22-Jul-2020 ம் தேதிய விண்ணப்பம்.
மனையின் பரப்பளவு-11184.000 சதுர அடி

| S.No | Build Floor Name | UsageName | BuildupSqft |
|---|---|---|---|
| 1 | Stilt Floor | RESIDENTIAL | 4751.000 |
| 2 | First Floor | RESIDENTIAL | 2872.370 |
| 3 | First Floor | COMMERCIAL | 1601.150 |
| 4 | Second Floor | RESIDENTIAL | 4474.000 |
| 5 | Third Floor | RESIDENTIAL | 4474.000 |
| 6 | Fourth Floor | RESIDENTIAL | 4474.000 |
| 7 | Fivth Floor | RESIDENTIAL | 4474.000 |
| 8 | Lift and Headroom | RESIDENTIAL | 286.000 |
| | | **Total Sqft** | **27406.520** |

செலுத்தப்பட்ட கட்டணங்களின் விவரம் பின்வருமாறு

| S.No | கட்டணம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | விளம்பரப்பலகை வைப்பு | 1500.00 |
| 2 | மழை நீர் சேகரிப்பு முன் வைப்புத் தொகை | 2000.00 |
| 3 | ஆய்வுக் கட்டணம் | 6660.00 |
| 4 | பழைய கட்டிடம் இடிப்புக் கட்டணம் | 24115.00 |
| 5 | கழிவுநீர் நீர் தொட்டி | 125000.00 |
| 6 | கட்டிட உரிமையாணைக் கட்டணம் | 173440.00 |
| 7 | பொருள் சேகரிப்புக் கட்டணம் | 231700.00 |
| | **Total Amount** | **564415.00** |

| Receipt No | Receipt Date | Amount | Payment Mode |
|---|---|---|---|
| 146/4/5/20-21/0004734 | 15/Sep/2020 | 564415.00 | Cash |

| Fees Description | DD/Challan No | DD/Challan Date | Amount |
|---|---|---|---|
| Labour welfare fund | AA266665 | 05/Oct/2020 | 165561.00 |

உத்தரவு :

2008-ம் ஆண்டின் திருநெல்வேலி மாநகராட்சி சட்டம் 275, 276-வது பிரிவின் கீழ் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள கிராமம்:,கதவு/மனை எண்:ASS, மகாராஜநகர் 3-வது மெயின் ரோடு, Maharajanagar, Palayamkottai , தொகுதி: BS, பகுதி 12,நகரளவு எண்: 91, உள்ள இடத்தை அங்கீகரித்து வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மாறுதல் கட்டிடம்/ கூடுதல் கட்டிடம்/ புதுப்பித்து கட்டிக்கொள்ள கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின் ஒரு தொகுப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

கட்டிடம் கட்ட குறித்த இடத்தில் கட்டிடத்தை வரைபடத்தில் வரைந்துள்ளபடி/ திருத்தப்பட்டபடி கீழ்கண்ட கட்டுபாடுகளுக்கு 17/10/2020 தேதியில் இருந்து 16/10/2025 தேதிக்குள் கட்டிக்கொள்ள உரிமை ஆணை வழங்கப்படுகிறது.

பெறுபவர்,

ரெங்கநாதன், ஜெம் ப்ராப்பர்டிஸ் (பவர் ஏஜென்ட்)
ASS,மகாராஜநகர் 3-வது மெயின் ரோடு,
Maharajanagar, Palayamkottai

ஆணையாளர்க்காக
திருநெல்வேலி மாநகராட்சி
பாளையங்கோட்டை.

நகல் : இளம் / உதவி பொறியாளர் - கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட தேதியை தெரிவிக்க
நகல் வருவாய் உதவியாளர் - கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் கட்டிடத்திற்கு வரிவிதித்து வரிவிதிப்பு எண்ணை தெரிவிக்க
நகல் வருவாய் பிரிவு எழுத்தர்.